[1979 மார்ச் 10]

80 ரூபாய் சம்பளம் போதுமா என்பதை யோசித்து, அரசாங்கமே அந்த பள்ளிகளை தன் பொறுப்பில் ஏற்று, அவர்களுக்கு நேரடியாக சம்பளம் கொடுக்க, சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர வர்களே, 80 ரூபாய் வழங்குவதாக நான் சொல்லவில்லை. 80 ரூபாய் வழங்குகிறவர்களுக்கு சம்பளக் கமிஷன் எவ்வளவு ஊதியம் தரவேண்டுமென்று நிர்ணயம் செய்யவில்லை. அதனால்தான் குறைபாடு இருக்கிறது. இப்போது மூன்று நிலைகளில் தரப்படுகின்ற சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். 60 ரூபாயாக இருந்ததை 75 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். 30 ரூபாயாக இருந்ததை 45 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். 90 ரூபாயாக இருந்ததை 100 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இந்த இடையிலே இருக்கிற சிக்கல் காரணமாக இந்த வினா எழுந்திருக்கிறது.

பினாமி நிலங்களை மேற்கொள்ளும் திட்டம்.

*வினா எண் 318.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பினாமி நிலங்களை எடுத்து நிலமில்லா ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

(ஆ) இதுவரை எவ்வளவு நிலம் எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டது ? மாவட்ட வாரியாக?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) (ஆ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சென்ற பல்லாண்டு காலமாகவே ஒவ்வொரு அமைச்சரும் பினாமி நிலங்களை எடுக்கப் போகிறோம், ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கப் போகிறோம் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைப் போன்று சென்ற ஆண்டு நமது முதலமைச்சர் அவர்கள்கூட இந்த பினாமி நிலங்களை எடுத்துக் கொடுக்கப் போகிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த பினாமி நிலங்களை நீங்கள் எடுப்பதற்குள்ளாக அது அனாமதேய பேர்வழிகளிடம் மாறக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை உணர்ந்து, அதை உடனடியாக எடுத்துக் கொடுப்பதற்கு

சர்க்கார் முன்வருமா? உடனடியாக எடுத்துக் கொடுப்பதற்கு எங்களுடைய ஒத்துழைப்பு வேண்டுமென்றால் ஒவ்வொரு கிராமத்திலும் சர்வ கட்சிக் குழு அமையுங்கள்; நாங்கள் ஒத்துழைப்புத் தருகிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நில உச்சவரம்புச் சட்டம் வருவதை எப்படியோ நிலச்சுவான்தார்கள் தெரிந்து கொண்டு, அதை பினாமியாக மாற்றிக் கொள்ளும் வகையில் சட்டம் வருவதற்கு முன்பே அதிகாரப் பூர்வமாக எழுதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எழுதி வைத்திருப்பதை அவசரப்பட்டு நாம் எடுப்பது நடைமுறைக்கு சாத்தியமாக இருக்காது. இதில் இருக்கிற சங்கடங்களை உணர்ந்து, அதே நேரத்தில் நியாயத்தையும் உணர்ந்து சங்கடங்களை நீக்கவும் நியாயத்தை நிறைவேற்றவும் அரசு ஆழ்ந்து பரிசிலித்துக்கொண்டிருக்கிறது.

[முற்பகல் 9—10]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இதுவரையிலும் எத்தனை வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் எவ்வளவு நிலப்பட்டா வழங்கப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன். முறையே அது எவ்வளவு ஏக்கர் என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, 1977—78ஆம் ஆண்டில் 53,223 பேருக்கு வீட்டு மனைப்பட்டா இந்த அரசு கொடுத்திருக்கிறது. 1978—79 ஆம் ஆண்டில் அதாவது அக்டோபர் 31ஆம் தேதி வரையிலும் இந்த இரண்டு மூன்று மாதங்களுக்குரிய கணக்கு இல்லை—3,839 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலப் பட்டா பற்றியும் கேட்டார்கள். 1977—78ஆம் ஆண்டில் 40,712 ஏக்கர் நிலங்களை எடுத்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவை 36,966 பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டில் அதாவது 1978—79-ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் 31-தேதி வரையிலும் எடுக்கப்பட்ட நிலங்கள், அதாவது அரசு நிலங்கள் 29,744 ஏக்கரை 29,744 பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் அரசு நிலங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போது பதில் சொன்னார்கள். ஆனால் இந்த நிலங்கள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிய

வில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அது எப்போது என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆகவே இந்த அரசாங்கம் உடனடியாக ஒரு காலவரம்பை நிர்ணயித்து குறிப்பிட்ட தேதிக்குள் நிச்சயமாக எல்லா பினாமி நிலங்களும் எடுத்துக்கொள்ளப்படும் என்ற ஒரு உத்தரவாதத்தை அளிக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசை நீங்கள் நம்பவேண்டும். இந்த பினாமி நிலங்களை எடுத்துக்கொள்வதில் அரசு எவ்வளவு விரைவு காட்டுகிறது என்பதையும் நீங்கள் நம்பவேண்டும். உச்சவரம்பு நிலங்களைப் பற்றியும் மற்ற நிலங்களைப் பற்றியும் உள்ள ரகசியங்களை முன்பே சொல்லிவிட்டால் அதனால் திட்டத்திற்கு ஆபத்து ஏற்படும். ஆகவே அப்படிப்பட்ட தவறுகளை மீண்டும் இந்த அரசு செய்யாது, நானும் செய்யத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சில மிராசுதாரர்கள் தங்களது பினாமி நிலங்களை சில குடியானவர்களுக்கு பட்டா செய்து கொடுத்து அவர்கள் அனுபவித்து வருவது அரசுக்கு தெரியுமா? அப்படிப்பட்டவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அரசுக்குப் பல விஷயங்கள் தெரியும். ஆனால் அதிகாரபூர்வமான தகவல் இல்லாமல் அவர்களைத் தண்டிக்க முடியாது. ஆகவே, இதற்கு என்ன செய்வது என்று அரசு சட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்செண்ட் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 6 மாதங்களுக்கு முன்பாக பேசும்போது தஞ்சையில் 3 ஆயிரம் ஏக்கர் பினாமி நிலங்கள் இருக்கின்றன, அவை உடனடியாக எடுக்கப்பட்டு மக்களுக்குக் கொடுக்கப்படும் என்றார்கள். அவர் வாக்குறுதியினை நிறைவேற்றுகின்ற வகையில் அந்த நிலங்கள் எடுக்கப்பட்டு மக்களுக்குக் கொடுக்கப்பட்டனவா என்றும், அதன் அடிப்படையில் பயன் அடைந்த அரிசனங்கள் எத்தனை பேர் என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, எனக்கு இருக்கின்ற ஆர்வத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்புவார்கள் என்று கருதுகிறேன்.

எனக்கு ஆர்வமும் இருக்கிறது. ஆசையும் இருக்கிறது. ஆனால் அதிலே சங்கடங்களும் இருக்கின்றன. ஆனாலும் இவற்றை எல்லாம் அரசு எடுத்துக்கொண்டு பொது மக்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இவை எல்லாம் என்னென்ன வழிவகைகளில் எடுக்கப்படும் என்பதைச் சொல்லக் கூடாது என்பதற்காகச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பினாமி நிலங்களை எடுப்பதற்கு அமைச்சர் அவர்களுக்கு ஆசையும் இருக்கிறது. ஆர்வமும் இருக்கிறது என்று சொன்னார்கள். வரவேற்கவேண்டிய விஷயந்தான். இந்த பினாமி என்பது ஒருவர் பெயரிலுள்ள நிலத்தை பல பேர்களுக்கு பிரித்து எழுதிவைத்து, ஒன்றாகவே அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள் என்பது. இதைக் கண்டுபிடிக்க எந்தமாதிரி ஏற்பாட்டை செய்திருக்கிறார்கள் ? அந்தந்தக் கிராமங்களிலேயே சர்வகட்சிக் குழுக்கள் அமைத்து மக்கள் கமிட்டி அமைத்து விட்டால் சரியாக, உடனடியாகக் கண்டுபிடிக்கமுடியும். அதற்கு அமைச்சர் அவர்கள் தயாராயிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : எந்தமாதிரி ஏற்பாடு என்பதை இப்போது சொல்லமுடியாத நிலையில் இருக்கிறேன. சொல்லக்கூடாது. ஆனால் அந்த ஏற்பாடு வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் என்னைப் பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திரு. துரை கோவிந்தராசன் : பினாமி நிலங்களை எடுக்கிறபோது, பினாமி நிலங்கள் வைத்திருப்பவர்களுக்கு இந்த அரசு இதுவரை தந்துவந்த தொகையைவிடக் குறைவாக, மிகக் குறைவாக தருவதாக அறிவித்திருப்பதற்கு நன்றி. அதே நேரத்தில் இந்த பினாமி நிலங்களை எடுத்து பினாமிக்கே போய் சேராத அளவிற்கு அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பினாமி நிலங்கள் நல்ல நோக்கோடுதான் எடுக்கப்படும். அவை பினாமி நிலங்கள் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குக் கொடுக்காமல் பார்த்துக்கொள்ளப்படும். பினாமி பெயரில் குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள். குத்தகைதாரர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, பினாமி நிலங்கள் எல்லாம் எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : மூலக் கேள்வி பினாமி நிலங்களை எடுத்து வினியோகம் செய்வது. அமைச்சர் அவர்கள் அரசு நிலங்கள் பற்றிய கணக்கைச் சொன்னார்கள். பினாமி நிலங்களை எடுத்து

1979 மார்ச் 10]

இதுவரை எவ்வளவு பேர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது? அதற்கு பதில் தரவேண்டும். அதோடு கிராமங்களில் அடிப் படைச் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்தால் நிலங்களை மறுபங்கீடு செய்யவேண்டும். பினாமி நிலங்களை எடுத்துக் கொடுப்பது வீட்டுமனைப்பட்டா வுக்காக அல்ல. அவற்றை உழுதுகொண்டிருக்கும் ஏழை எளிய விவசாயிகளுக்கு கொடுப்பார்களா? அந்தமாதிரி ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : முதலிலேயே சொல்லி விட்டேன். பினாமி நிலங்களை எடுப்பதற்கு எல்லா விதமான ஆலோசனைகளும் நடந்துகொண்டிருக்கிறது. இது வரை எடுக்கவில்லை என்று தெரிவித்துக்கொண்டேன். எடுக் கிறபோது ஏழை எளியவர்களுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் அரசு மேற்கொள்ளும்.

திரு. சு. பாலன் : திருச்செந்தூர் கோவில் நிலத்தை ஸன் பேப்பர் மில்லுக்காக பினாமி பெயரால் முன்பு அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஆதித்தனார் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை சர்க்கார் மீண்டும் கைவசப் படுத்துமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுக்கள் இருக்கக்கூடாது. இங்கில்லாத ஒருவரைப் பற்றிச் சொல்லி அதை ஒரு பிரச்சினையாக எழுப்புவது நியாயம் இல்லை. அந்தக் கேள்விக்கே இடமில்லை. (குறுக்கீடு.) அது ஒரு குற்றச்சாட்டாக அமைகிறது. (குறுக்கீடு.) பெயரைச் சொல்லாமலிருந்தாலும் கூட அவர்கள் கேட்கிற துணைக் கேள்விக்கு அமைச்சர் அவர்களிடம் பதில் தயாராக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? பதில் இருக்காது.

திரு. வி. கே. கோதண்டராமன் : மூலக்கேள்வி கேட்டவர் களுக்கு இரண்டு துணை வினாக்கள் கேட்கலாம் என்று பி.எ.ஸி. யில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு கேள்விகள் கேட்கலாம் என்று சொல்லி என்னைக் கட்டாயப்படுத்த வேண் டாம். 20 கேள்விகளையும் ஒரு மணி நேரத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் இருக்கிறது திரு. கோதண்டராமன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா, முக்கியமான கேள்விக்கு நிறைய அவகாசம் கொடுத்தால் பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: அமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கத்தை நம்புங்கள் என்று சொன்னார்கள். நம்புகிறோம், ரொம்ப ரொம்ப நம்புகிறோம். எல்லா சர்க்கார்களையும் நம்பித்தான் வந்திருக்கிறோம். இதுவரை பினாமி நிலங்கள் எந்த அளவிற்கு எடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிந்த விஷயம். ஆகவே உண்மையிலேயே பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை எடுத்துக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் இப்போது ஒருநபர்ருக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற நிலைமை இருக்கிறது. அதை மாற்றி ஐந்து பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர்கள்—நாட் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்ஸ்—என்ற அடிப்படையில் விதிவிலக்கும் இல்லாத நிலையில் திட்டவட்டமாக சட்டத்தை மாற்றியமைப்பதின் மூலமாகத்தான் உங்களுக்கு எந்தவிதமான சிக்கலும் இருக்காது. அப்போதுதான் மற்றவர்களுக்கு கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கும். அந்த அளவிற்கு ஒத்துழைப்பார்களா?

[முற்பகல் 9–20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியில் முதல் கேள்வி பினாமி நிலத்தைப் பற்றியது. 16, 18 ஆண்டு காலமாக பொருத்திருந்தவர்கள் இன்னும் சில காலம் பொறுத்திருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய இரண்டாவது யோசனைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மருதூர் கிராமத்திலுள்ள காலி நிலம்.

* வினா எண் 319—திரு. சோ. ந. பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருவலூர் ஊராட்சி, மருதூர் கிராமம் நத்தம், எஸ். எப். 470 சாலையில் உள்ள காலி நிலம் ஏலத்தில் விடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

(இ) அதனை மீண்டும் எடுத்து அரிசனங்களுக்கு வழங்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) இல்லை.

(ஆ) & (இ: இக் கேள்விக்கு இடமில்லை.